1987 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்ற தமிழர்களிடமிருந்தும் அவர்கள் நிதியை பெற்றிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் கொடுத்துள்ளது பற்றிய தகவல்இங்கு இல்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா நாடுகளிலும் வாழ்கின்ற தமிழர்களும் அந்தமான் தமிழ்ச் சங்கத்திற்கு போகின்ற நிலைமை இருக்கிற காரணத்தால் அங்கே போகின்றவர்களுக்கு போதுமான தங்கும் இட வசதியில்லை. ஆகவே தமிழக அரசு அங்கே ஒரு சுற்றுலா மாளிகையை கட்டி, இங்கேயிருந்து செல்கிற தமிழர்கள் அதிலே தங்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து மட்டுமல்லாமல் வெளி நாடுகளில் வாழும் தமிழர்களும் அங்கே செல்கிறார்கள். ஆனால் தங்கும் மாளிகை கட்டுவதைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் சுற்றுலா வாரியம்தான் அதை கவனிக்க வேண்டும்.

புதிய இசைக் கல்லூரி ஆரம்பித்தல்.

467—(*வினா எண் 9877) திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத் தலைமையிடத்தில் புதிய இசைக் கல்லூரி துவங்க அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். நீலகிரி மாவட்டம் கல்வியில் மிகவும் பின் தங்கியுள்ள ஒரு மாவட்டம். அங்கே ஒரு புதிய இசைக் கல்லூரியை ஏற்படுத்தினால் அங்குள்ள மக்களுக்கு மிகவும் பயன்படும். ஆகவே இதனை மறு பரிசீலனை செய்து அந்த மாவட்ட மக்களுக்கு இருக்கின்ற இந்தக் குறையை தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை, மதுரை ஆகிய இடங்களில் அரசு இசைக் கல்லூரிகள் இருக்கின்றன. கோவையிலே ஓர் இசைக் கல்லூரியை, நீலகிரி மாவட்டத்தின் தேவையையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு நிறுவ அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

468—(*வினா எண். 12027) திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி திருவாவடுதுறையில் வித்வான் இராஜரத்தினம் பிள்ளை நினைவாக இசைக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற பல்வேறு இசைக் கலைஞர்களைப் பாராட்டி அவர்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து வருகிறது. அதுபோல வாழ்ந்து மறைந்து போன இசைக் கலைஞர்களையும் பாராட்டி வருகிறது. அதுபோல தஞ்சை மாவட்டத்திலுள்ள குற்றாலம் தொகுதியைச் சேர்ந்த திருவாவடுதுறையில் வாழ்ந்து மறைந்த நாதஸ்வர வித்வான் பெரியவர் ராஜரத்தினம் பிள்ளை அவர்கள் பெயரில் ஓர் இசைக் கல்லூரியை தொடங்குவது பற்றி பரிசீலிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை பொறுத்துதான் அரசு நடவடிக்கை எடுக்க முடியும். ஏற்கெனவே சென்னையில் ஒன்றும், மதுரையில் ஒன்றும், ஆக இரண்டு அரசு இசைக் கல்லூரிகள் இருக்கின்றன. கோவையிலே மட்டும் இன்னொரு இசைக் கல்லூரியை நிறுவுகின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளது.

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள சுவாமிமலையில் இருக்கின்ற நாதஸ்வர இசைக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்? அதனை விரிவுபடுத்துகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?